www.xtrapapers.com

**Cambridge International Examinations**
Cambridge Ordinary Level

**TAMIL** **3226/02**

Paper 2 Translation and Reading Comprehension **May/June 2016**

**1 hour 30 minutes**

INSERT

**READ THESE INSTRUCTIONS FIRST**

This Insert contains the reading passage for use with the Question Paper.

You may annotate this Insert and use the blank spaces for planning.
This Insert is **not** assessed by the Examiner.

This document consists of **3** printed pages and **1** blank page.

DC (LEG) 129116/1 **R**
© UCLES 2016

www.xtrapapers.com



Read the following passage carefully and then answer, briefly and in **Tamil**, **Questions 3–12** on the Question Paper.

இரண்டு பேர் திருமணம் செய்து கொண்ட உடனே கிராமத்தை விட்டு நகரத்திற்குச் சென்றார்கள். நண்பர்களும் உறவினர்களும் நகரத்தில் வேலை எளிதாகக் கிடைக்கும் என்று கூறினார்கள். இரண்டு பேருக்கும் கிராமத்தில் தொடர்ந்து வேலை கிடைப்பது மிகவும் கஷ்டமாக இருந்தது. நகரத்திற்கு வந்த பிறகு அவர்களுக்கு உடனே வேலை கிடைத்து விட்டது. அவனுக்குத் தச்சன் வேலை கிடைத்தது. அவளுக்கு ஒரு குடும்பத்தில் இரண்டு குழந்தைகளைப் பார்த்துக் கொள்ளும் வேலை கிடைத்தது. இரண்டு வருடங்களுக்குப் பிறகு இவர்களுக்கு முதல் குழந்தை பிறந்தது. இவர்களுக்கு எல்லாமே சரியாகப் போய்க் கொண்டிருந்தன. அரசாங்கம் கட்டி விற்கும் விலை குறைந்த வீடுகள் தங்களுக்கும் கிடைக்கும் என்று நினைத்துக் கொண்டிருந்தார்கள். இந்த வீடுகள் சிறியதாக இருக்கும். ஆனால் அவர்களால் வாங்க முடியும் என்று நினைத்தார்கள். அதிக சம்பளம் இல்லாமல் இருப்பவர்களுக்கு அரசாங்கம் குறைந்த விலையில் வீடுகள் கட்டி அவர்களுக்கு முதல் வீடாக விற்கின்றனர். அவர்களுடைய முதல் குழந்தை பிறப்பதற்கு முன்பு வீடு கொடுப்பதற்கு, அவர்களின் பெயர் முதலில் இருப்பதாகக் கூறினார்கள். பிறகு அது தவறாகக் கூறப்பட்டுள்ளது என்று சொன்னார்கள்.

அவர்கள் தொடர்ந்து வேலை செய்து கொண்டு, கொஞ்சம் பணமும் சேர்த்தார்கள். குழந்தையின் நர்ஸரிக்கும் பிறகு பள்ளிக்கூடத்திற்கும் பணம் கொடுக்க வேண்டியிருந்தது. மூன்று வருடங்கள் கழித்து இரண்டாவது குழந்தையும் பிறந்தது. பள்ளிக்கூடத்தில் படிக்கும் போது குழந்தைகளை நன்றாகப் படிக்கச் சொல்லிப் பார்த்துக் கொண்டனர். அதிக மக்கள் நகரத்திற்கு வந்தபடியால் அவர்களின் தேவைகள் அதிகமாகவும் அவசரமாகவும் இருந்தபடியால், இவர்களால் வீட்டிற்குக் காலி இடங்கள் உள்ள பட்டியலில் பெயர் பதிவு செய்வதும் கஷ்டமாக இருந்தது. பல குடும்பங்கள் நிறையக் குழந்தைகளுடன் வந்தனர். சிலர் நோய்வாய்ப் பட்டிருந்த பெற்றோர்களையும் கூட்டிக் கொண்டு வந்து இருந்தனர். இவர்களுக்கு வேலை கிடைத்த மாதிரி இப்போது வேலை கிடைப்பதும் கஷ்டமாக இருந்தது.

குழந்தைகள் உயர்நிலைப் பள்ளிக்கூடம் போய் நன்றாகப் படித்த பிறகு கல்லூரிக்குப் போனார்கள். இவர்கள் இந்த இரண்டு அறைகள் உள்ள வாடகை வீட்டிலேயே இருபது வருடங்களாக இருந்தனர். இரண்டாவது குழந்தை கல்லூரிக்குப் போய் இரண்டு மாதத்திற்குப் பிறகு ஒரு நாள் அரசாங்க அதிகாரி கையில் நிறைய பேப்பர்களுடன் வீட்டிற்கு வந்தார். அவர் இவர்களுக்கு ஒரு வீடு கொடுக்கப் போவதாகவும், சம்மதமானால்

www.xtrapapers.com



பேப்பர்களில் கையெழுத்துப் போடும்படியும் கூறினார். கையெழுத்துப் போட்ட பிறகு ஒரு வாரத்தில் சாவி கிடைக்கும் என்றும் கூறினார்.

அவர்கள் கையெழுத்துப் போட்டு வீட்டிற்குப் போனார்கள். இவர்களுடைய ஆயுட்காலத்தில் இப்பொழுது சொந்த வீடு கிடைத்தது. வீட்டில் ஒரு சமையல் அறை, ஒரு வரவேற்பு அறை, இரண்டு படுக்கை அறைகள், ஒரு குளிக்கும் அறை, ஒரு தோட்டம் இருந்தன. சில வருஷங்களுக்குப் பிறகு இவர்களுடைய குழந்தைகள் நல்ல வேலைக்கு வந்து, தங்களுக்குப் பெரிய வீடுகள் வாங்கிக் கொண்டு பெற்றோருக்கு வேலை கொடுத்து, குழந்தைகளை நன்றாக வளர்த்து அந்த நகரத்திலேயே இருந்தனர்.

www.xtrapapers.com



**BLANK PAGE**

Permission to reproduce items where third-party owned material protected by copyright is included has been sought and cleared where possible. Every reasonable effort has been made by the publisher (UCLES) to trace copyright holders, but if any items requiring clearance have unwittingly been included, the publisher will be pleased to make amends at the earliest possible opportunity.

To avoid the issue of disclosure of answer-related information to candidates, all copyright acknowledgements are reproduced online in the Cambridge International Examinations Copyright Acknowledgements Booklet. This is produced for each series of examinations and is freely available to download at www.cie.org.uk after the live examination series.

Cambridge International Examinations is part of the Cambridge Assessment Group. Cambridge Assessment is the brand name of University of Cambridge Local Examinations Syndicate (UCLES), which is itself a department of the University of Cambridge.

© UCLES 2016